மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 22/2023

பெயர் – காளிராஜ் (பி.வா.சா.3)

நாள் – 28.02.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் தற்போது கீழசங்கரபாண்டியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். சாட்சி சொல்லுவதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிப்பதற்கு யார் அழைத்து வந்தார் என்றால் காளியம்மாள் அழைத்து வந்தார். காளியம்மாள் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். எனது நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ள விபரங்களுக்கான தகவலை சொன்னவர் காளியம்மாள் என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தெரியாது என்றால் சரியல்ல தெரியும். தாவா சொத்து மேலசங்கபாண்டியபுரத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் குருசாமி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் குருசாமியும் மற்றும் குருசாமி சகோதரர் கம்பி வேலி அமைத்து ஆடு, மாடுகள் வளர்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. காளியம்மாள், சுப்புத்தாயும் கூலி வேலை பார்த்து வருகிறார்கள். தாவா சொத்திற்கான மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நான் போய் உள்ளேனா என்றால் போய் உள்ளேன். அங்கு மின் விளக்கு எரிகிறதா என்றால் இல்லை. வீடே இடிந்துவிட்டது. காளியம்மாள் எங்கு வசித்து வருகிறார் என்றால் சங்கபாண்டியபுரத்தில் தான் வசித்து வந்தார். வீடு இடிந்து போய்விட்டதால் கடந்த 6 மாத காலமாக படந்தாலில் வசித்து வருகிறார். காளியம்மாளின் பெற்றோர் 40 வருடத்திற்கு முன்பாக இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 20 ஆண்டுகள் தான் ஆகிறது. காளியம்மாளின் பெற்றோர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டதாக நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ள விபரங்கள் பொய் என்றால் நிரூபண உறுதிக்கூற்றில் அவ்வாறு இல்லை. காளியம்மாளின் பெற்றோர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டதாக நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும்

இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான உரிமை யாருக்கு உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல முடியும். பிரதிவாதிக்கு தான் உரிமையுள்ளது. அவருக்கு பட்டா உள்ளது. பிரதிவாதிக்கு எப்போது பட்டா கொடுத்தார்கள் என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதியின் பெயரில் பட்டா உள்ள விபரத்தை யார் சொன்னார்கள் என்றால் பிரதிவாதி சொல்லி தெரியும். அவர் பட்டாவை என்னிடம் காண்பித்தார். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், அந்த சொத்தை எக்காலத்திலும் பிரதிவாதி அனுபவித்தது இல்லை என்றாலும், வழக்கிற்காக தாவா சொத்தை பிரதிவாதி அனுபவிப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆறு மாதங்களுக்கு முன்பாக பிரதிவாதி படந்தாலில் குடி வந்ததாக நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு தற்போது இடிந்த நிலையில் தான் உள்ளது என்றால் சரிதான். மேல்பகுதி இடிந்துள்ளது. தாவா சொத்து பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி மற்றும் வாதியின் முன்னோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்து இடிந்து போனதால் வாதியும், அவரது சகோதரரும் வேலி அமைத்து அதில் ஆடு, மாடுகள் வளர்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.